விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

9 மார்ச் 2025 - 8-ம் இதழ்



இன்றுவின் இந்த இதுழ் படைப்பாளர்கள்

வேலூர் முத்து ஆனந்த்
திண்டுக்கல் செங்கமலன்
குடந்தை பரிபூரணன்
சு.மூன் சுதாகரன்
மலர்மதி
சு.அருண்பிரகாஷ்
நடேஷ்கன்னா
கோவை வளர்கவி

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

இனிய உதயம்

அழகிய ஆரம்பம்...

இனிய உதயம்

9 மார்ச் 2025 - 8-ம் இதழ்

அனைவருக்கும் வணக்கம்.
இன்று இதழின் வெற்றிகரமான
எட்டாம் இதழ் உங்கள்
பார்வையில்...

தொடர் முயற்சிக்கு உறுதுணையாக
இருக்கும் மதிப்பு மிகு
எழுத்தாளர்களுக்கு சிறப்பு
நன்றிகள்...

இன்றுவின் வணிகத் தொடர்பு
ஏற்படுத்த தொடர் முயற்சி
எடுத்துவருகிறோம்.

டெக் ட்ரிக்,
மனசே ஒரு நிமிசம், யார் இவர்?
எண்ணோடு விளையாடு
போன்ற புதுமைகள் இந்த இதழில்

படியுங்கள்... ரசியுங்கள்...
வாழ்த்துங்கள்..
வளர்கிறோம்...

நீங்கள் நடத்தும் வாட்சப்
குழுக்களில் இன்று எண்ணை
இணைக்கவும்... மற்றவர்களுக்கும்
இதழை பகிரவும்...

ர.ஸ்ரீஹரி
ஆசிரியர்

அழகிய ஆரம்பம்...

இனிய உதயம்

29-சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை
செல் 7094053241 indhrumail@gmail.com

இனிய உதயம் இன்று முதல் 7094053241 Whatsapp
இனிய உதயம் இன்று முதல் 7094053241 Whatsapp

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

போட்டித் தேர்வு


சரி X தவறு

வ.எண்	சரியான வார்த்தை	தவறான வார்த்தைகள்
1	ஒன்று	ஒண்ணு
2	இரண்டு	ரெண்டு
3	மூன்று	மூணு
4	நான்கு	நாலு
5	ஐந்து	அஞ்சி
6	ஒன்பது	ஒம்போது, ஒண்பது
7	பதினொன்று	பதினொன்னு
8	பன்னிரண்டு	பன்னிரெண்டு, பனிரெண்டு, பனிரண்டு
9	பதின்மூன்று	பதிமூணு, பதிமூன்று
10	பதினான்கு	பதின்னான்கு, பதினாங்கு
11	பதினைந்து	பதின்னைந்து
12	பதினாறு	பதனாறு, பதிணாறு
13	பதினேழு	பதனேழு
14	பதினெட்டு	பதனெட்டு
15	பத்தொன்பது	பத்தொண்பது, பத்தொம்போது, பத்தோம்பது
16	இருபத்தி ஒன்று	இருபத்தொண்ணு, இருபத்தொன்று
17	இருபத்தி இரண்டு	இருபத்திரெண்டு, இருபத்துரெண்டு
18	இருபத்தி மூன்று	இருபத்மூணு, இருபத்துமூணு
19	இருபத்தி நான்கு	இருபத்நான்கு, இருபத்துநான்கு
20	இருபத்தி ஐந்து	இருபத்தைந்து, இருபத்து ஐந்து
21	இருபத்தி ஆறு	இருபத்தாறு, இருபத்து ஆறு
22	இருபத்தி ஏழு	இருபத்தேழு, இருபத்து ஏழு
23	இருபத்தி எட்டு	இருபத்தெட்டு, இருபத்துஎட்டு
24	இருபத்தி ஒன்பது	இருபத்தொன்பது, இருபத்துஒன்பது
25	முப்பத்தி ஒன்று	முப்பத்தொன்று, முப்பத்துஒன்று
26	முப்பத்தி இரண்டு	முப்பத்திரெண்டு, முப்பத்துரெண்டு
27	முப்பத்தி மூன்று	முப்பத்மூணு, முப்பத்து மூன்று
28	முப்பத்தி நான்கு	முப்பத்நான்கு, முப்பத்து நான்கு
29	முப்பத்தி ஐந்து	முப்பத்தஞ்சி, முப்பத்து ஐந்து
30	முப்பத்தி ஆறு	முப்பத்தாறு, முப்பத்து ஆறு
31	முப்பத்தி ஏழு	முப்பத்தியேழு, முப்பத்து ஏழு
32	முப்பத்தி எட்டு	முப்பத்தெட்டு, முப்பத்து எட்டு
33	முப்பத்தி ஒன்பது	முப்பத்தொன்பது, முப்பத்து ஒன்பது
34	நாற்பது	நாப்பது, நால்பது
35	ஐம்பது	அம்பது, அய்ம்பது, ஐய்ம்பது
36	அறுபது	அறுவது,
37	எழுபது	எழுவது
38	எண்பது	எம்பது
39	தொன்னூறு	தொன்னூரு
40	இட்டலி	இட்லி

100 ஆசான்களுக்கு மேலானவர் தந்தை...

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

கவிதை



முத்து ஆனந்த்
வேலூர்

காதல் என்று
வந்து விட்ட பின்
நான்
உன்னைத் தாண்டி
வேறு
எதைப் பற்றி
எழுதி விட முடியும்?

உன்னை நினைத்துப்
பெருமை கொள்கிறேன் அன்பே!
அலட்டல் சுந்தரிகள்
ஆயிரம் பேர் இருக்க
நீயோ
எனக்கும் சேர்த்து
அன்பு செலுத்திக்
காதலில் குளிக்க வைக்கிறாய்!

அப்படி என்னதானடி
சொல்லி வைத்திருக்கிறாய்
என் மனதிடம்?!
நீ சொல்வதைக் கேட்கவும்
செய்யவும்
ஒவ்வொரு வினாடியுமல்லவா
காத்திருக்கிறது!

பேய்
பிசாசு
பூதம்
இதன் மீதெல்லாம்
நம்பிக்கை இல்லை உனக்கு!
ஆனால்
காதல் ராட்சசி என்று
உன்னைக் கொஞ்சினால் மட்டும்
உ(எ)ன் இதழ் குளிர
மு த் த ங் க ளி டு கி றா ய்!


நல்ல மனிதனின்
பெருமை எல்லா
திசையிலும் ஓங்கும்...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

Su	M	Tu	We	Th	Fr	Sa
30	31	March 2025				1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

குறைந்த செலவில்
உங்கள்
விளம்பரம் வெளியாக
அழைக்கவும்...
7094053241



உன்னை
அடக்கினால்
உலகம் உன் வசம்...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

கதை



குடந்தை பரிபூரணன்

தூரம் பொருட்டல்ல
துடிக்கும் இதயத்தில்
ஈர நினைவுகளே
இனிப்பாகும்

வேரும்
மண்ணில் மறைந்திருக்கும்
மலர்ச்செடியும் பூத்திருக்க
கண்ணை
இமைகாணாக் காதல்.






இலவசமாக
கிடைப்பதில்
அறிவுரைக்கே முதலிடம்...

இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

மைக்ரோ கதை



சு.முன் சுதாகரன்

வானவன்மகாதேவி

தன்னைச் சுடும்!

”பொய் சாட்சி சொல்லி
அந்தப் பணத்தை வாங்காதீங்கன்னு
எத்தனை தடவைச் சொன்னேன்
கேட்டீங்களா?!”

”இப்ப பாருங்க நம்ம பிள்ளை
பிழைப்பானா மாட்டானான்னு
தெரியலையே...” அலறினாள்
ரதிமீனா!

பைக் மோதி சாலை விபத்தொன்றில்
உயிரிழந்த சோமசுந்தரத்திற்கு
எதிராகவும் பைக்காரருக்கு
ஆதரவாகவும் சாட்சி சொல்லி
வாங்கிய பணத்திற்குக்
கூடுதலாகவே “ஐசியு“விலிருக்கும்
தன் மகன் ராகவனுக்காகப்
பணத்தைக் கட்டிய ரங்கராஜனுக்குக்
காத்திருந்தது அதிர்ச்சி தகவல்.

”சாரி...சார் எவ்வளவு முயன்றும்
உங்க பையனைக் காப்பாற்ற
முடியலைன்னு கூறினார் டாக்டர்.”

”தப்பு பண்ணிட்டனே!
அய்யோ...நான் சொன்ன ஒரு
பொய்யாலே என் பிள்ளையும் பைக்
மோதி செத்துட்டானே!”
தலையிலடித்து அழுதவரின்
கண்களில் பட்டது.

மருத்துவமனையிலுள்ள
தினம் ஒரு குறள் பலகை...
”தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.”

பொன்னை விட
மண் பெரிது...

இன்று ஓ இதழ் | 7094053241 Whatsapp

சிந்திக்க ஒரு நொடி

- பயணம் செல்லும் போது
கவனிக்க வேண்டியவைகள்.

எதில் செல்கிறீர்கள்? ரயிலா? பேருந்தா?
முன்பதிவு செய்து விட்டீர்களா?

செல்லும் ஊரில் எங்கு தங்குவீர்கள்?
ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதா?

தேவையான அளவு பணம் கையிலும்,
வங்கி இருப்பிலும் உள்ளதா?

ஆதார், அடையாள அட்டை, ஏடிஎம் கார்டு
எடுத்துக் கொண்டீர்களா?

மருந்துகள் எடுத்துக் கொண்டீர்களா?

சில்லரையாக சிறிது பணம்
எடுத்து வைத்துக்கொண்டீர்களா?

சார்ஜர், ஹெட்செட்
எடுத்துக்கொண்டீர்களா?

பயணம் சிறக்க வாழ்த்துக்கள்...

எண்ணோடு விளையாடு

1	2	3
4	5	6
7	8	9


789 - நீங்கள் படிப்பது
741 - தூக்கம்
45 - போதை
65 - பசை
753 - தொந்தரவு
23 - சவுக்கு
65 - வா

விடை 10ம் பக்கம்

அளவுக்கு மீறிய
சாமார்த்தியம்
வெறுப்புக்குள்ளாகும்...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp | இன்று ஈ பதிப்பு

மினி கதை



மலர்மதி

சுய விளம்பரம்

"யோவ்' நேத்து ரிலீஸ் ஆன என் படத்தோட கதை உன்னோட கதைன்னு சொல்லி கேஸ் போடுய்யா. எல்லா செலவையும் நான் ஏத்துக்கறேன்." என்றார் டைரக்டர் டேவிட்.

"பொய் வழக்கு எதுக்கு சார்? அதனால உங்களுக்கு என்ன லாபம்?" என்று கேட்டான் சந்திரன்.

"எல்லாம் சுய விளம்பரம் தான்யா. அப்படி என்ன படம்னு ரசிகர் கூட்டம் அலைமோத, படம் பிச்சிக்கிட்டு ஓடும்!"

சந்திரனுக்கு தலை சுற்றியது.



"தூங்க வைக்கிறதுக்காக மகாராணி சொன்ன கதையைக் கேட்டு, இளவரசர் விழுந்து விழுந்து சிரிக்கிறாரே.."

"பின்னே... நம் மன்னர் போருக்குப் போன கதையை எல்லாம் சொன்னால் சிரிப்பு வராதா"

-சு.அருண் பிரகாஷ்,
இராமச்சந்திரபுரம்

பரிசு மலிவானாலும் அன்பே பெரிது...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

கதை



சு.அருண் பிரகாஷ்

இராமச்சந்திராபுரம்

உருவுகண்டு எள்ளாமை

பேரழகால் எனை வதைக்கும்
உன் சிற்றிடையைவிடவும்
சிறந்த உதாரணம்
உலகினில் ஏது...
உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
எனும் குறட்பாவுக்கு

விபரீத ஆசை

இறைவன் கொடுத்த
இயற்"கை"யை உடைத்துவிட்டு
செயற்"கை"யைப் பொருத்திக்கொண்டு
வாழ ஆசைப்படுகிறான்
மனிதன்

பலம் இழத்தல்

வாலியின் எதிரில் நிற்பவர்கள்கூட
பாதி பலத்தைத்தான்
இழப்பார்கள்...
உன் எதிரில் நிற்கும்போதெல்லாம்
முழு பலத்தையும் இழந்து விடுகிறேனே நான்

எண்ணோடு விளையாடு விடை

1 வு	2 க	3 சை
4 ர	5 ம்	6 க
7 இ	8 ன்	9 று

அன்புள்ள இதயம்
இளமையாகவே
இருக்கும்...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

புது கவிதை



நடேஷ் கன்னா

கல்லிடைக்குறிச்சி

1 நண்பன்

சந்தோஷத்தையும் சோகத்தையும்
தாங்கிக் கொண்டே நம்மை
எழுந்து நடமாட வைக்கும்
நம் மனதுதான் மிகச்சிறந்த நண்பன்
நம்மை நாமே நேசிப்போம்

2. உண்டியல்

நிறை மாதம் அடையும் முன்னரே
தொடர் தொல்லைகளால்
குறை மாதத்தில் கலைக்கப்பட்ட
கரு தான் ஏழை வீட்டு உண்டியல்

3. யூ ட்யூப்

அடுத்த வேளை உணவுக்கு
என்ன செய்வது என்ற கவலையுடன்
யூ ட்யூப் பார்க்கத் தொடங்கினாள்
குடும்பத் தலைவி

4. திருடன்

ஊரில் உள்ள எல்லோரும்
நன்றாக வசதியாக இருக்க வேண்டும்
என்ன பிரார்த்தனை செய்தான்
திருடன்

அதிகம் தருவதாக
வாக்குறுதி தராதே...
கொடு...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

யார் இவர்?



குஜராத்தில்
பிறந்தவர்

அனைவர்
வீட்டிலும்
இருப்பவர்

போராட்டம்
இவரது
அடையாளம்

ராட்டை இவரது
சாட்டை

விடை பின் வரும் பக்கம் ஒன்றில்...

மனசே ஒரு நிமிசம்...

எந்த செயலைச் செய்யும்முன் மனம் ஒரு செய்தி சொல்லும்... இதைச் செய்... இதைச் செய்யாதே... என்று அதன் பெயர் தான் மனசாட்சி... அல்லது விழிப்புணர்வு... அதை கூர்ந்து கவனித்து அதற்கு ஒரு மரியாதை கொடுத்தால் வாழ்க்கையே மாறும்... நாம் என்ற ஒரு மனிதருக்கும் மனசாட்சி அல்லது விழிப்புணர்வு என்பதும் வேறு வேறு நபர்... அந்த இன்னொரு நபர் நமக்குள் இருக்கும் ஒரு பார்ட்னர். அவர் சொல்வது பெரும்பாலும் நல்லதாகவே இருக்கும். நண்பர்கள் சினிமா போக அழைக்கிறார்கள் என்றால் உள்மனது போகாதே என்று சொன்னால் எப்படியாவது தப்பித்து போகாதீர்கள்... நட்புக்காக நீங்கள் சென்றால் விருப்பமில்லாமல் அந்த சினிமாவைப் பார்ப்பீர்கள்.... உங்கள் மனம் சொல்லும் அப்பவே சொன்னேன் கேட்டியா? என்று

எனவே உள் மன உணர்வுக்கு சிறிது மதிப்பளியுங்கள்... வாழ்க்கை மாறும்...

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக்கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ்
Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...

பொய்க்கு கால் இல்லை..
இறக்கையுண்டு...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

நேரம்

- நேரத்தை சேமித்தால் அதன் பலனை கூட்டு வட்டியில் பலன் பெறலாம். ஒரு மணி நேர வேலையை முக்கால் மணி நேரத்தில் முடித்தால் மீதி கால் மணி நேரத்தில் அடுத்த வேலையைச் செய்யும் போது அது கூட்டு வட்டிக்கு சமம்...

- நேரத்தை மிச்சப்படுத்துவது என்பது பணியை வேகமாகச் செய்வது மட்டுமல்ல... விவேகமாகச் செய்வது...

- சமையலறையில் நேரத்தை மிச்சப் படுத்தினாலும் சுவை குறையக் கூடாது...

- சாலையில் நேரத்தை மிச்சப்படுத்த எண்ணினாலும் நிதானம் தவறக்கூடாது...

- நேரம் திரும்ப கிடைக்காத வளம்... சரியாக பயன்படுத்துபவனுக்கு தினசரி பண்டிகை.

- நேரத்தை பயன்படுத்த தெரியாவிட்டால் அது ஒரு நாள்.


ஆக்கம் - தி.ரேவதி



தவறானதை செய்து
பெருமை
அடைய முடியாது...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

கதைப் பாடல்



வளர்கவி

கோவை

'ஒரிஜினல் டெசிஷன் அவுட்!'
(கதைப்பாடல்)

அடர்ந்த காட்டின் கும்மிருட்டில்
ஆலமரத்தின் விழுதொன்றில்
உயர்ந்த கால்கள் ஒன்றாக்கி
உயர்தவம் செய்தது ஒரு சிலந்தி!

கடவுள் கருணை மிகக்கொண்டு
கருப்புச் சிலந்திதனை நெருங்கி,
'என்ன வேண்டுமெ?னக் கேட்டார்.
இருகை கட்டிப் பணிவாக'

'வாயே இல்லா முகத்தோடு
வாழ்க்கைத் துணையை' வழங்கென்று
வரமாய்க் கேட்டது அச்சிலந்தி
வழங்கிப் போனார் ஒரு துணையை!.

கடவுள் தந்த துணைவிக்கோ
கண்கள்,கைகள் தாமுண்டு
கருப்பு நிறமும் அதற்குண்டு
முகத்தில் உண்ண வாயில்லை!

கணவன் சிலந்தி மகிழ்ந்ததுவாம்
கடவுள் கருணையை வியந்ததுவாம்!
எட்டுக் கை கொட்டிச் சிரித்தபடி:
இறுமாபெய்தி இருந்ததுவாம்!

மனைவிச் சிலந்தியை வலையிலிட்டு
வலம் வரச் சென்றது அச்சிலந்தி!
வலையில் பற்பல பூச்சிகளாம்
வந்து தின்ன யோசனையாம்!

திரும்பி வந்து பார்த்தாலோ
மருந்துக்குக் கூட இரையில்லை!
மன மிக வாடி மறைந்தபடி
என்ன நடக்குது எனப் பார்க்க'

மனைவிச் சிலந்தி கால்களினால்
மளமள வென்று உணவெடுத்து
அக்குள் பகுதியில் அமைதிருக்கும்
அகண்ட துளை வழி அனுப்பியதாம்!

கடவுள் நேரில் காட்சி தந்து
கட்டிய மனைவி வாய் போக்க
வரமா கேட்டாய் வகையின்றி??!!
எண்ணிப்பார் நீ எது நியாயம்?!

தொலைக்காட்சி நடுவர் போல வரும்
தோள்கள் தொட்டு வருத்தமுற்று
கொடுத்த வரத்தை தவறென்று
குறிப்பாய்ச் சொல்லி, மறைந்தாராம்!

நெருங்கிப் பார்த்தால்
வெகு சிலரே
மரியாதைக்குரியவர்கள்...


இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp


R.Anusha - win

Tech Trick

உங்கள் வாட்சப்பில் ஒரு குழுவில் நீங்கள் இருக்கவேண்டும். ஆனால் மெசேஜ் படிக்க விரும்பவில்லையா...

அந்த குழுவை அழுத்திப் பிடியுங்கள் Lock Chat என்று வரும்





அதில் செட் செய்து விட்டு தேவைப்படும்போது மீண்டும் Locked Chats என்ற ஆப்சனை க்ளிக் செய்து மீண்டும் பார்த்துக்கொள்ளலாம். இதனால் பிடிக்காத குழுவிடமிருந்து வெளியேறாமல் தேவைப்படும் போது பார்த்துக்கொள்ளலாம்.

யார் இவர்?



மகாத்மா காந்தி

கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி

செல் 7094053241 indhrumail@gmail.com

இன்றுவை படித்ததற்கு நன்றி...